CPA

CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# சட்டத்தரணி திரு. லக்ஷான் டயஸ் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சமீபத்தைய விமர்சனங்கள் தொடர்பிலான ஆழ்ந்த வருத்தங்கள்

தெரண தொலைக்காட்சியில் 2017 ஜீன் மாதம் 14 ஆம் திகதி அன்று ஒளிபரப்பப்பட்ட “அலுத் பார்லிமென்துவ” என்ற நிகழ்ச்சியில், திரு. லக்ஷான் டயஸ் இலங்கையிலுள்ள கிறிஸ்தவ வழிபாட்டிடங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக கூறிய விடயங்களுக்காக 24 மணித்தியாலங்களுக்குள் மன்னிப்புக் கோராத பட்சத்தில் “திரு. லக்ஷான் டயஸ் அவர்களை சட்டத் தொழிற்துறையிலிருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்” என்று நீதி மற்றும் பௌத்த சாசனத்திற்கான அமைச்சர் திரு. விஜேதாச ராஜபக்ஷ அண்மையில் விடுத்த அறிக்கை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) மிகுந்த வருத்தமடைகின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) அமைச்சரினால் விடுக்கப்பட்ட இத்தகைய அறிக்கையினை, கடந்த பல தசாப்தங்களாக விடாமுயற்சியுடனும், தொடர்ச்சியாகவும் அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகள் மீதான தாக்குதல்களுக்கு எதிராக பாதுகாப்பளித்து வந்த ஒரு சட்டத்தரணி மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலருக்கு எதிரான ஒரு அச்சுறுத்தல் என்ற ரீதியிலேயே பார்க்கின்றது. அவருடைய தொழிற்சார் தகைமையிலே அவர் இலங்கையின் சட்ட கட்டமைப்பு மற்றும் அரசியலமைப்பிலே உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்துவதற்காக நீதிமன்றிலே தோன்றியுள்ளார். அமைச்சருடைய அறிக்கையானது திரு. லக்ஷான் டயஸ் எழுப்பிய பிரச்சினைகளை வேண்டுமென்றே அல்லது கவனக்குறைவாகத் தவறாக கூறுகின்றது. மேலும் சிரேஷ்ட அமைச்சரினால் விடுக்கப்படுகின்ற இத்தகைய அச்சுறுத்தல்களை நாங்கள் அரசாங்கத்தினை விமர்சிக்கின்ற எந்தவொரு நபருக்கும் எதிரான ஒரு மறைமுகமான அச்சுறுத்தலாகவும், இலங்கையின் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளினை மட்டுப்படுத்துவதற்கான ஒரு அப்பட்டமான மற்றும் விகாரமான முயற்சியாகவுமே பார்க்கின்றோம். ஆட்சி தொடர்பான எதிர்பார்ப்புக்கள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்கள் என்பன தொடர்பில் தற்போதைய அரசாங்கமானது ஆட்சிக்கு வந்த உடனடியான காலப்பகுதியில் செய்த வாக்குறுதிகள் தொடர்பாக நாங்கள் ஆழ்ந்த வருத்தமும் ஏமாற்றமும் அடைகின்றோம்.

திரு. லக்ஷான் டயஸ் அவர்களினால் தாக்குதல்கள் தொடர்பாக அளிக்கப்பட்ட சான்றாதாரம் ஆனது, National Christian Evangelical Alliance of Sri Lanka (NCEASL) இனால் தொகுக்கப்பட்ட ஆவணமாக்கமொன்றினை அடிப்படையாகக் கொண்டது என்பதனை நாம் அறிந்துள்ளோம் என்பதுடன் அவர் 2015 ஆம் ஆண்டிலிருந்து 195 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். அமைச்சர் ராஜபக்ஷ தான், கார்டினல் மல்கம் ரஞ்ஜித் அவர்களுடன் இவ்விடயத்தினை சரிபார்த்ததாகவும், கார்டினல் மல்கம் ரஞ்ஜித் கத்தோலிக்கர்களுக்கு எதிராக எவ்விதமான தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன என்பதனை ஏற்க மறுத்துள்ளார் எனவும் ஆகவே திரு. லக்ஷான் டயஸ் அவர்களினால் கூறப்பட்ட விபரம் தவறானது எனவும் கூறுகின்றார். நிகழ்வுகளை சரிபார்க்கின்ற போது எம்முடைய மத சமூகங்களின் பல்வகைமைத்தன்மை மற்றும் பன்மைத்துவத்தினை அறிந்து செயற்படும் படியும் மற்றும் அதன் உணர்ச்சிமிகுத் தன்மையினை புரிந்து கொள்ளும் படியும் நாம் அமைச்சரை வலியுறுத்துகின்றோம். நிகழ்வுகளின் சரிபார்ப்பானது நம்பத்தகுந்த மற்றும் விரிவான முறையில் செய்யப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதுடன் இது அமைச்சர்கள், மதத் தலைவர்கள், அலுவலர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் ஏனையவர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பின்மை என்பன பொறுப்பு வாய்ந்த அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன, யுத்தத்திற்கு பின்னதான சமுதாயத்திலே பிரிவுகள் இன்னும்

அதிகரிக்கப்படவில்லை அல்லது அடிப்படை உரிமைகள் சுருக்கப்படவில்லை என்பதனை உறுதி செய்வதற்கு மிகவும் முக்கியமான விடயங்களாகும்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA), கடந்த அரசாங்கங்களிலிருந்ததான மனித உரிமை பாதுகாவலர்களை அச்சுறுத்துதல் என்ற தீய நடைமுறையினை தவிர்க்குமாறும், தகவல்களுக்கான மற்றும் சரிபார்ப்பதற்கான தன்னுடைய மூலங்களினை விரிவு படுத்திக் கொள்ளுமாறும் அமைச்சர் ராஜபக்ஷவினை வலியுறுத்துகின்றது. அவர் அவருடைய அச்சுறுத்தலின் விளைவாக திரு. டயஸ் இற்கு எவ்வித ஊறும் ஏற்படாது என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

சிறுபான்மை மதத்தவர்களுக்கு, வழிபாட்டிடங்களுக்கு மற்றும் வியாபாரங்களுக்கு எதிராக இடம்பெற்ற அண்மைக்காலத் தாக்குதல்களை தேசிய முன்னுரிமையான விடயமொன்றாகக் கருதி அது தொடர்பாக ஒரு சுயாதீனமான விசாரணையினை ஆரம்பிக்கக் கோரி மற்றும் குற்றவாளிகளைக் கைது செய்வதற்கும், வழக்குத் தொடர்வதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தற்போதைய சட்டக் கட்டமைப்பிற்குள்ளாக எடுக்கக் கோரி ஜனாதிபதி சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நாம் விடுத்த எம்முடைய அழைப்பினை மீண்டும் விடுக்கின்றோம். அரசாங்கமானது அதன் அனைத்துப் பிரஜைகளினதும் உரிமைகளினைப் பாதுகாக்க விருப்பம் கொண்டுள்ளது மற்றும் அதற்கான இயலுமையினைக் கொண்டுள்ளது என்ற நம்பிக்கையினை **அனைத்து சமூகங்களிலும்** மீளக்கொண்டு வருவதற்கான விரைவானதும், வினைத்திறனானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.